## பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு

# வறுமை ஒழிப்புத் திட்டமல்ல
# இட ஒதுக்கீடு

கிராமப்புறங்களில் நாளொன்றுக்கு
27 ரூபாய் சம்பாதிக்கிறவரும்
நகர்ப்புறத்தில் 33 ரூபாய் சம்பாதிக்கிறவரும்
வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்
என்ற வரையறை உள்ள நாட்டில்,
வருடம் 3 லட்சம் சம்பாதிப்பவர்
வருமான வரி கட்ட வேண்டும்
என்ற விதிமுறை உள்ள நாட்டில்
ஆண்டுக்கு 8 லட்சம்
(நாளொன்றிற்கு 2000 ரூபாய்க்கு மேல்)
வருமானம் உள்ளவர் எப்படி
பொருளாதாரத்தில் பின்தங்கியவராகக்
கருதப்படுவார்?





வெளியீடு
தந்தை பெரியார் திராவிடர் கழகம்
உடுமலைப்பேட்டை - மடத்துக்குளம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய

உயர் சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு

# வறுமை ஒழிப்புத் திட்டமல்ல

# இடஒதுக்கீடு!

*வெளியீடு :*

**தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

உடுமலைப்பேட்டை – மடத்துக்குளம்

**வறுமை ஒழிப்புத் திட்டமல்ல**

**இடஒதுக்கீடு!**

முதல் பதிப்பு: ஜனவரி - 2019

பக்கம் : 16

அட்டைப்படம் : நன்றி - முகிலன் (லயோலா கல்லூரி ஓவியக் கண்காட்சி)

வடிவமைப்பு - அச்சாக்கம் : ரவி அச்சகம், உடுமலை

வெளியீடு: **தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

உடுமலைப்பேட்டை - மடத்துக்குளம்

தொடர்புக்கு : 97883 24474

நன்கொடை : ரூ. 10/-

# வறுமை ஒழிப்புத் திட்டமல்ல

# இடஒதுக்கீடு!

பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர் சாதியைச் சார்ந்த ஏழைகளுக்கு வேலைவாய்ப்பில் 10% இடஒதுக்கீட்டை மத்திய அரசு வழங்கியுள்ளது. அதன்படி ஆண்டுக்கு ரூ. 8 லட்சம் வரை வருமானம் உள்ளவரும் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்போரும் 1000 சதுர அடிக்கு குறைவாக வீடு வைத்திருப்போரும் ஏழைகளாகக் கருதப்பட்டு அவர்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை வழங்குவதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதுவும் அவசர அவசரமாக இரண்டே நாளில் (08.01.2019, 09.01.2019) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 124 ஆவது திருத்தமாக நாடாளுமன்றத்தின் மக்களவையிலும் மாநிலங்களவையிலும் இது நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் (12.01.2019) பெறப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற பி.ஜே.பி. அரசாங்கத்திற்கு திடீரென்று பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்கள் மீது, அதுவும் உயர் சாதியைச் சார்ந்த மக்கள் மீது மட்டும் அக்கறை ஏற்படக் காரணம் என்ன?

மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றி அவர்களின் வறுமையைப் போக்க அரசிடம் எத்தனையோ திட்டங்கள் இருக்க, அதையெல்லாம் விட்டுவிட்டு அவர்களுக்கு 10% இடஒதுக்கீடு அளித்திருப்பதன் நோக்கம் என்ன?

இடஒதுக்கீட்டு கொள்கை மீது இந்துத்துவவாதிகளுக்கு இருக்கின்ற வெறுப்பின் காரணமாக, இட ஒதுக்கீட்டு முறையை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் என்கின்ற அவர்களுடைய அடிப்படைக் கொள்கைக்கு ஏற்ப இடஒதுக்கீட்டு முறையில் ஒரு குழப்பத்தை

ஏற்படுத்தி அம்முறையையே இல்லாது ஒழித்திடவே பொருளாதார ரீதியாக இடஒதுக்கீடு வழங்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எதையுமே மேலோட்டமாகவே சிந்திக்கின்ற இந்திய மக்கள், பணமதிப்பிழப்பு என்ற பெயரால் கருப்பு பணத்தை ஒழிக்கப் போகிறேன் என்று மோடி அறிவித்தபோது எப்படி நம்பினார்களோ அதுபோலவே ஏழைகளின் முன்னேற்றத்திற்காக 10% இட ஒதுக்கீட்டை வழங்குகிறோம் என்பதையும் நம்புகிறார்கள். இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்து வந்துள்ள இப்போது நாம் விழித்துக் கொள்ளாவிட்டால் நூறாண்டு காலமாக போராடி நாம் பெற்ற உரிமையை இழந்து மீண்டும் அடிமை நிலைக்குத் தள்ளப் படுவோம். வர்ணாஸ்ரம மனுதர்மத் தின்படி பார்ப்பனர்களே இந்த நாட்டில் சகல உரிமைகளையும் பெற்ற சர்வாதிகாரிகளாக வலம் வரத் தொடங்குவார்கள். சமூகத்திலும் அரசியலிலும் அவர்களின் ஆதிக்கமே நிலை பெற்றுவிடும்.

## இடஒதுக்கீடு என்பது என்ன?

இந்தியாவைப் பொறுத்தவரை மக்கள் சமூகம் பிறப்பின் அடிப்படையில் சாதியால் பிரிக்கப்பட்டு, உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு பல பிரிவுகளாக வாழ்ந்து வருகிறார்கள். உலகத்தில் வேறு எந்த சமூகத்திலும் இல்லாத மிகப்பெரிய கொடுமை இது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அனைத்து உரிமை களும் மறுக்கப்பட்டது. கல்வி கற்க உரிமை இல்லை; வீதியில் நடக்க உரிமை இல்லை; விரும்பிய வண்ணம் உடை உடுத்த முடியாது; உண்ண முடியாது; சுதந்திரமாக கருத்துக்களைச் சொல்ல முடியாது; பொதுக்குளத்தில் நீர் எடுக்க முடியாது என எல்லா சமூக உரிமைகளும் மறுக்கப்பட்ட மக்கள் அதிகாரத்துக்கும் ஆட்சிக்கும் வர நினைக்க முடியுமா?

மக்கள் சமூகம் என்பது அனைத்து தரப்பு மக்களின் குரலாக, அவர்களது பங்களிப்போடு நடைபெறுவதாக இருக்க வேண்டும். இதுதான் நாகரீகமடைந்த மனித சமூகம் என்பதற்கு உதாரணமாகும். அப்படிப்பட்ட அடிப்படையான தகுதியைப் பெறுவதற்கு யோக்கியதை அற்ற சமூகமாக இந்திய இந்து சமூகம் விளங்கியது.





சமூக ரீதியாக கல்வி மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட சமூகம் கல்வி பெற்று, அதன்மூலம் வேலைவாய்ப்பில் அமர்ந்து இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களின் உரிமைக்குரலை ஒலிப்பவர்களாகத் திகழ வேண்டும்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும் ஆட்சி அதிகாரத்தில், ஆட்சி நிர்வாகத்தில் கொள்கை முடிவு எடுப்பவர்களாக, நிர்வாகம் செய்பவர்களாக, சட்டம் செய்பவர்களாக, அதை நடைமுறைப் படுத்துபவர்களாக அனைத்து துறைகளிலும் விளங்கி, அனைத்து மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற அரசாங்கத்தை நடத்துவதற்குத் தான் இடஒதுக்கீட்டு முறை அறிமுகம் செய்யப்பட்டு நடை முறைக்கு கொண்டுவரப்பட்டது.

சமூகத்திலும் கல்வியிலும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களை சுயமரியாதை பெற்ற மக்களாக வாழ செய்வதற்கே இடஒதுக்கீட்டு முறை பயன்படுத்தப்பட்டது.

காலங்காலமாக சமூகத்தில் உயர்ந்த சாதியாகவும் கல்வியில் மெத்தப் படித்த மேதாவிகளாகவும் நிர்வாகத்தில் உயர் அதிகாரிகளாகவும் தங்களை நிலைநிறுத்திக்கொண்ட பார்ப்பனர்கள் இடஒதுக்கீட்டு முறையை அமுலுக்குக் கொண்டு வந்த நீதிக்கட்சி காலத்திலிருந்து இடஒதுக்கீட்டை அழித்தொழிப்பதற்கு பல்வேறு சூழ்ச்சிகளை செய்து கொண்டே உள்ளார்கள். அவர்கள் எந்த காலத்திலும் இட ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அதை ஒழிப்பதற்கு திட்டமிடுவார்கள்; செயல்படுத்து வார்கள். அப்படி அவர்களுக்கு கிடைத்த ஒரு வாய்ப்பாகவே மோடியின் ஆட்சியை பயன்படுத்திக்கொள்கிறார்கள். பல்லாண்டு கால பகையை முடித்துக்கொள்ள தொடங்கியிருக்கிறார்கள்.

சாதிச் சமூகமான இந்திய சமூகத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்கள் சாதியின் காரணமாகவே உரிமைகளை இழந்து அடிமைகளை போல் கேவலமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மற்றவர்களைப்போல் உரிமைகளைப் பெற்று சமத்துவமாக வாழ, அவர்களும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரத்தில் சமநிலை அடைய, எதைக் காரணம் காட்டி உரிமைகள் மறுக்கப் பட்டனவோ அதே சாதியின் அடிப்படையிலேயே அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதுவே அவர்களின் முன்னேற்

றத்தை, சுயமரியாதையை வளர்த்தெடுக்கும் என்கின்ற அடிப்படையில் இடஒதுக்கீடு சமூகத்திலும் கல்வியிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. சாதி அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்ட இந்த சமூகத்தில் பொருளாதாரமும் சாதியின் பெயரால் தடுக்கப்பட்டே வந்தது. அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறியவர்களாக இருந்தாலும் சாதியால் வாய்ப்புகள், உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகமாகவே இருந்து வந்தனர்.

மக்களின் சமூக நிலையும் பொருளாதார நிலையும் சாதியால் நிர்ணயிக்கப்பட்டு முடிவு செய்யப்படும் சமூகத்தில் சாதி ரீதியான இடஒதுக்கீடே சமத்துவத்திற்கான தொடக்கம் என்று தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் போன்ற சமூக விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்ட நிலையில், இடஒதுக்கீட்டில் பொருளாதாரத்தை அளவுகோலாக வைப்பது அபாயகரமானது.

## முதல் அரசியல் சட்டத் திருத்தத்தில்...

இடஒதுக்கீடு என்பது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உயிர் மூச்சாகும். அதனால்தான் இடஒதுக்கீட்டுக்கு எதிராக பார்ப்பனர்கள் வழக்கு தொடுத்த போது தந்தை பெரியார் அவர்களின் பெரும் போராட்டத்தால் இந்திய அரசியல் சட்டத்தில் 1951-ல் முதல் திருத்தம் செய்யப்பட்டது.

இந்திய அரசியல் சட்டத்தின்படி வேலைவாய்ப்பில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்தது. அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு செண்பகம் துரைசாமி என்பவர் சென்னையில் ஒரு வழக்கு தொடுத்தார். மருத்துவ படிப்புக்கு விண்ணப்பித்திருந்த எனக்கு இடஒதுக்கீடு காரணமாக இடம் கிடைக்கவில்லை என்பதுதான் அந்த வழக்கு. (அவர் மருத்துவப் படிப்புக்கு விண்ணப்பமே போடவில்லை என்பது தனிக்கதை) விண்ணப்பதாரர் சார்பாக அந்த வழக்கில் ஆஜரானவர் அல்லாடி கிருஷ்ணமூர்த்தி அய்யங்கார் என்ற பிரபலமான வழக்கறிஞர். அது மட்டுமல்ல அவர் அரசியல் நிர்ணய சபையின் ஒரு உறுப்பினராக இருந்து சட்டம் இயற்றியவர். அந்த வழக்கில் கல்வியில் இடஒதுக்கீடு கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இந்த தீர்ப்புக்கு எதிராக தந்தை பெரியார் போர் பிரகடனம் செய்து மத்திய அரசை பணிய வைத்தார். அதன் காரணமாக அரசியல்





சட்டத்தில் முதலாவதாக 15(4) திருத்தம் செய்யப்பட்டது. திருத்தம் செய்யப்படுகின்ற பொழுது நடைபெற்ற விவாதத்தில் சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு என்பதில் பொருளாதார ரீதியாக என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது.

இடஒதுக்கீட்டில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கும் பங்களிக்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வாதிட்டபோது, அப்போதைய பிரதமர் நேரு அவர்கள் பொருளாதார அளவுகோல் என்பது அவ்வப்போது மாறக்கூடியது; அது நிலையானது அல்ல; அது குழப்பத்திற்கு வழிவகுக்கும் என்று மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். பின்னர் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட பொழுது, பொருளாதார அளவுகோலுக்கு ஆதரவாக 5 வாக்குகளும் எதிராக 243 வாக்குகளும் பதிவாகி பொருளாதார அளவுகோலுக்கு அரசியல் சட்டத்தில் சாவு மணி அடிக்கப்பட்டது.

ஆனாலும் பார்ப்பனர்களும் உயர் சாதி இந்துக்களும் இடஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோலைப் பயன்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கையை அடிக்கடி எழுப்புகிறார்கள்; வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அதை சட்டமாக்கி கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளைத் தட்டிப் பறிப்பதில் முன்னணியில் நிற்கிறார்கள். அந்த வகையில் மோடி ஆட்சியிலும் ஒரு அரசியல் சட்டத்திருத்தம் வந்துவிட்டது.

## நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில்...

காங்கிரஸ் கட்சியின் சார்பாக பி.வி. நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, இதேபோல பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர்சாதி ஏழைகளுக்கு 10% இடஒதுக்கீடு அளித்து சட்டம் இயற்றினார். ஆனால் இந்தச் சட்டம் சம்பந்தமான வழக்கு உச்சநீதிமன்றத்தில் வந்தபொழுது 9 நீதிபதிகள் அமர்வு (இந்திரா சகானி வழக்கு) ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியது.

பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு அளிக்க முடியாது என்பதை தீர்க்கமாக சொல்லிவிட்டது. அதேபோல சமூக ரீதியாக பின்தங்கியவர்கள் பொருளாதார ரீதியாக ஏழ்மை நிலையில்

இருந்தால் அவர்களுக்கு இடஒதுக்கீட்டில் பொருளாதாரத்தை அளவுகோலாக வைத்து இடஒதுக்கீடு வழங்குவதில் தவறில்லை என்றும் கூறிய உச்ச நீதிமன்றம் பொருளாதார ரீதியாக இடஒதுக்கீடு அளித்தது தவறு என்று நரசிம்மராவ் அரசின் சட்டத்தை செல்லாததாக்கியது.

### மற்ற மாநிலங்களில்...

குஜராத் மாநிலத்தில் பி.ஜே.பி. ஆட்சியில் இருந்தபொழுது 2016ஆம் ஆண்டு பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர்சாதியின ருக்கு இடஒதுக்கீட்டுக்கு ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்தது. அந்த சட்டத்திற்கு எதிரான வழக்கில் அம்மாநில உயர்நீதிமன்றம் இச் சட்டம் செல்லாது என தீர்ப்பு வழங்கியது.

அதேபோல 2015ஆம் ஆண்டு ராஜஸ்தானிலும் 1980ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்திலும் 2016ஆம் ஆண்டு அரியானா அரசும் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க சட்டம் இயற்றிய பொழுது அம்மாநில உயர் நீதிமன்றங்களால் அச்சட்டம் செல்லாது என தீர்ப்பளிக்கப்பட்டது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 340 ஆவது பிரிவில் சமூக ரீதியாக, கல்வி ரீதியாக (Socially And Educationally) இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று விளக்கமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனடிப் படையில்தான் முதல் அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த பொழுது இடஒதுக்கீட்டிற்கு பொருளாதார அளவுகோலை பயன்படுத்த வேண்டும் என்று சில உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து மறுக்கப்பட்டது.

காகா கலேல்கர் தலைமையில் அமைக்கப்பட்ட முதல் பிற்படுத்தப் பட்டோர் ஆணையம் தனது அறிக்கையை 30.3.1955-ல் அளித்தது. அதில் இடஒதுக்கீட்டுக்கான அளவுகோலாக பொருளாதாரம் இல்லை.

அதேபோல பி.பி. மண்டல் தலைமையில் அமைந்த மண்டல் குழுவின் பரிந்துரை 31.12.1980 அன்று அளிக்கப்பட்டது. அதிலும் இடஒதுக்கீட்டிற்கு பொருளாதார அளவுகோல் இல்லை.

மண்டல் குழு பரிந்துரை சம்பந்தமாகப் போடப்பட்ட இந்திரா சகானி வழக்கில், 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் பெரும்பான்





மையான 6 நீதிபதிகள் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவது கூடாது என்று தீர்ப்புக் கூறியுள்ளார்கள்.

அரசியல் சட்டத்தாலும் பிற்படுத்தப்பட்ட ஆணையங்களாலும் உச்ச நீதிமன்றத்தாலும் உயர் நீதிமன்றங்களாலும் இடஒதுக்கீட்டுக்கு பொருளாதார அளவுகோல் தவறானது என்று அறிவுறுத்தப்பட்ட பிறகும் இரண்டே நாட்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு சட்டத்தை நிறை வேற்றியிருப்பதன்மூலம் ஆணவத்தின் உச்சத்தில் இருக்கும் பார்ப்பனர்களால் இயக்கப்படும், இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டுதலோடு செயல்படும் மோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசு இந்த நாட்டின் சட்ட திட்டங்கள் எதுவும் எங்களை கட்டுப் படுத்தாது, நாங்கள் மனுதர்ம சட்டத்தின்படியே ஆட்சி நடத்துவோம் என்பதையே உணர்த்துகிறார்கள்.

அரசியல் சட்டத்தில் 124ஆவது திருத்தமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை ஆதரித்து மாநிலங்களவையில் 165 உறுப்பினர்களும் எதிர்ப்பு 7 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். அதேபோல மக்கள வையில் 323 உறுப்பினர்கள் ஆதரித்தும் 3 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்துள்ளனர்.

தேர்தல் ஆதாயத்திற்காக பி.ஜே.பி. மோடி அரசு இந்த இடஒதுக்கீடு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறது என்று குற்றம் சாட்டிய, விமர்சனம் செய்த, எதிர்த்த காங்கிரஸ் கட்சி, சமாஜ்வாதி கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் இந்த மசோதாவை ஆதரித்து உள்ளன; ஆதரவாக வாக்களித்தும் உள்ளன.

சமூகநீதி கொள்கையான இடஒதுக்கீட்டில் பொருளாதாரத்தை அளவுகோலாக வைப்பது தவறு என்று இந்தக் கட்சிகள் கூற வில்லை. மாறாக, உயர்சாதியினரின் வாக்குகளைப் பெறுவதற்காக தேர்தல் நேரத்தில் இந்த இடஒதுக்கீட்டை அளித்திருப்பதுதான் தவறு என்று கூறுகின்றன. இடஒதுக்கீட்டில் பொருளாதாரத்தை அளவுகோலாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் மேற்கண்ட கட்சிகளின் கருத்தாக இருக்கிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு என்பது, சமூகநீதி கொள்கையான இடஒதுக்கீட்டை அழிக்கும் செயல் என்பதை சமூகநீதி கொள்கையின் பிறப்பிடமான தமிழ்நாட்டின் கட்சிகள்தான் எடுத்துரைத்திருக்கின்றன. பி.ஜே.பி. கட்சியின் பிடியில் அகப்பட்டு அவர்கள் போடும் தாளத்திற்கு ஏற்ப ஆடி வருவதாக விமர்சனத்திற்குள்ளான அ.தி.மு.க. கூட 10% இட ஒதுக் கீட்டை கடுமையாக எதிர்த்து இருப்பதே அதற்கு உதாரணம் ஆகும். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களை முன்னேற்ற வேண்டு மானால், நீங்கள் அளித்த வாக்குறுதிப்படி ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் ரூபாயைப் போடுங்கள் என்று அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரை நாடாளுமன்றத்தில் மோடி அரசை நோக்கி எழுப்பிய கேள்வி, தமிழ்நாட்டின் சமூகநீதி குரலை வெளிப்படுத் தியது. தி.மு.க. எம்.பி. கனிமொழி நாடாளுமன்றத்தில் இம் மசோதாவை கடுமையாக கண்டித்து பேசியிருக்கிறார். இந்த இட ஒதுக்கீட்டை திரும்பப்பெற வேண்டும் என்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தீர்மானம் இயற்ற வேண்டும் என்று தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சாதியின் பெயரால் கல்வி மறுக்கப்பட்டு, சமூக உரிமைகள் மறுக்கப் பட்டு அடிமைகளாக வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, பழங்குடியின மக்களுக்கு கல்வியும் வேலைவாய்ப்பும் அரசு நிர்வாகத்தில், அதிகாரத்தில் பங்களிப்பும் வழங்கி அனைத்து மக்களும் சமநிலையில் வாழ, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப் பட்ட உரிமைதான் இடஒதுக்கீடு என்கின்ற தத்துவம் புரியாத வடநாட்டு தேசிய, மாநிலக் கட்சிகள் இந்த இடஒதுக்கீட்டை ஆதரித்திருக்கின்றன. சமூகநீதி கொள்கையின் அடிப்படை புரியாமல் இவர்கள் மிதவாத இந்துத்துவவாதிகளாக இருப்பதே இதற்கு காரணம்.

இடஒதுக்கீடு என்றால் வறுமையில் வாடும் ஏழைகளுக்கு வழங்கப்படும் சலுகை என்று வடநாட்டு கட்சிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாய்ப்புகள் மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைதான் இடஒதுக்கீடு என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அதனால்தான் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள உயர் சாதியினருக்கும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதில் உடன்பட்டுப் போகிறார்கள்.





நீதிக்கட்சி காலம் தொடங்கி சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுத்துக் கொடுத்தது இட ஒதுக்கீடு.

## வறுமை ஒழிப்பு திட்டம் அல்ல

ஏழ்மையை போக்க, பொருளாதாரத்தை வளர்க்க எத்தனையோ திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் கொண்டு வந்திருக்கின்றது.

குறைந்தபட்ச வேலைத்திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம், தேசிய கிராம வேலைத்திட்டம், கிராம இளைஞர்கள் சுயவேலை வாய்ப்பு திட்டம், ஊரக நிலமில்லாத தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு திட்டம், ஊரக மகளிர் குழந்தைகள் வேலைவாய்ப்புத் திட்டம், நேரு வேலைவாய்ப்புத் திட்டம், பிரதமரின் வேலை வாய்ப்பு திட்டம், கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், சிறு தொழில் கடன் உதவி, நகர்ப்புறங்களில் அனைவருக்கும் வீடு திட்டம் இப்படி பல்வேறு திட்டங்களை பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. கடன் உதவி வழங்குதல், மானியம் வழங்குதல் போன்ற சலுகைகளும் வழங்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசு முடிவு செய்தால், இதுபோன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைக்கலாம். உயர் சாதியினரை மட்டும் பொருளாதாரத்தில் உயர்த்தாமல் அனைத்து தரப்பு மக்களையும் பொருளாதார ரீதியாக முன்னேற்றலாம்.

அதற்கு மாறாக, இட ஒதுக்கீடு மூலமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களை முன்னேற்றுவோம் என்பது ஒட்டுமொத்த இட ஒதுக்கீடு நடைமுறையையே ஒழிக்கும் அடாவடித்தனம் ஆகும்.

ஒருவரின் தொழிலில் ஏற்படும் மாற்றங்களால் அவர் பொருளாதாரத் தில் உயர்ந்தவராகவோ, பின்தங்கியவராகவோ அடிக்கடி மாறிவிட வாய்ப்பு உள்ளது. இந்த ஆண்டு பொருளாதாரத்தில் பின்தங்கியவர் அடுத்த ஆண்டில் பொருளாதாரத்தில் உயர்ந்தவராக மாறிவிடுவார்.

அதேபோல பின்தங்கிப் போகவும் வாய்ப்புகள் உண்டு. விவசாயம் செய்பவருக்கும் அதுபோல மாறுகின்ற நிலை ஏற்படும். ஆகவே தான் பொருளாதார அளவுகோல் என்பது நிலையானது அல்ல; அடிக்கடி மாறக்கூடியது. அடிக்கடி மாறக்கூடிய பொருளாதாரத்தை இடஒதுக்கீட்டில் அளவுகோலாக வைத்தால் குழப்பம் ஏற்படும் என்று அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தத்தின்போது தெளிவாக வரையறுத்துள்ளார்கள்.

ஆனால், சாதி என்பது அப்படியல்ல. மெத்தப்படித்தவர்களும் உயர் பதவியில் உள்ளவர்களும் சாதியினால் சமூக மரியாதை அற்றவர் களாக, சமூக உரிமையைப் பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். இன்றும் தொடரும் சாதி வன்முறைகளும் ஆணவக் கொலைகளும் தீண்டத்தகாதவர் அரசுப் பள்ளியில் சமையல் செய்வதை எதிர்க்கும் சாதிவெறியும் அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நம் நாட்டில் பொருளாதாரப் பின்னணியில் மக்களிடையே சமூக ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்படவில்லை. சாதியின் காரணமாகவே அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளன.

பிறப்பின் அடிப்படையில் ஒருவரது சமூக மரியாதை நிர்ணயம் செய்யும் கொடுமை ஒழியும்வரையில், ஆட்சி அதிகாரத்தில் நிர்வாகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு பூர்த்தியாகும் வரையில், முடிவெடுக்கும் நிலைக்கு அனைத்து சமூக மக்களும் உயரும் வரையில் சமூக ரீதியாக, கல்வி ரீதியாகத்தான் இடஒதுக்கீடு தொடரவேண்டும்.

ஏனென்றால், உயர்சாதியினர் பொருளாதாரத்தில் வறுமை நிலையில் இருக்கலாம்; ஆனால் அவர்கள் யாரும் கல்வியில்லாத தற்குறிகள் அல்ல. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களில் பலர் பொருளா தாரத்தில் உயர்ந்த நிலையில் இருக்கலாம்; ஆனால் அவர்களில் பலர் இன்னமும் படிப்பறிவில்லாத மக்களாக இருக்கிறார்கள். எவ்வளவு படித்தாலும் பணம் இருந்தாலும் சமூகத்தில் உயர்சாதியினருக்கு சமமான நிலையை அடைய இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கி பல்லாண்டுகள் ஆன பின்னும், இன்னும் அவர்களுக்கான இட ஒதுக்கீடு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது.





தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 15% இடஒதுக்கீடும், பழங்குடியினருக்கு 7.5% இட ஒதுக்கீடும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27% இட ஒதுக்கீடும் தற்போது இந்தியா முழுவதும் நடைமுறையில் உள்ளது.

ஆனால் மத்திய அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, பழங்குடியின மக்களுக்கான இடஒதுக்கீடு முழுமையாக நிரப்பப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. 17.01.2019 நாளிட்ட நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் வெளிவந்துள்ள புள்ளி விவரமே போதுமானதாகும்.

*40 மத்தியப் பல்கலைக்கழகங்கள், மத்திய அரசின் 71 துறைகளில் பணியிடங்களில் வகுப்புவாரியாக வஞ்சிக்கப்பட்ட நிலவரம்: மத்திய பல்கலைக்கழகங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27%, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 15%, மலைவாழ் மக்களுக்கு 7.5% அளிக்கப்பட வேண்டிய நிலையில்,*

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்**

*உதவிப் பேராசிரியர்கள் - 14.38%*

*பேராசிரியர் - 0.0%*

*அசோசியேட் பேராசிரியர்கள் - 0.0%*

**பேராசிரியர்கள் பணியிடங்களில்**

*தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - 3.47%*

*பழங்குடி வகுப்பினர் - 0.7%*

**முற்படுத்தப்பட்ட வகுப்பினர்**

*பேராசிரியர்கள் பணியிடங்களில் - 95.2%*

*அசோசியேட் பேராசிரியர்கள் - 92.9%*

*உதவிப்பேராசிரியர்கள் - 1.3%*

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (27% இருக்கவேண்டிய நிலையில்)**

*மத்திய அரசின் 71 துறைகளில் - 14.94%*

*ரயில்வேத் துறையில் - 8.05%*

*மனித வள மேம்பாட்டுத்துறையில் - 8.42%*

மத்திய அமைச்சரவைச் செயலகத்தில் - 9.26%

நிதி ஆயோக்கில் - 7.56%

குடியரசுத் தலைவர் செயலகத்தில் - 7.56%

துணைக்குடியரசுத் தலைவர் செயலகத்தில் - 7.69%

மத்திய பணியாளர் தேர்வாணையத்தில் - 11.43%

சி.ஏ.ஜி. அமைப்பில் - 8.24%

மத்திய பல்கலைக்கழகங்களிலும் சரி, மத்திய அரசின் துறைகளிலும் சரி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கும் அளிக்கப்பட்ட இடஒதுக்கீடுகளும் நிரப்பப்படவில்லை.

நூற்றுக்கு மூன்று பேராக உள்ள பார்ப்பனர்கள் மட்டுமே மத்திய பல்கலைக் கழகங்களில் 95% அளவுக்கு ஆக்கிரமித்து ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

மத்திய அரசின் அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடியினர் இடஒதுக்கீட்டை முழுமையாக நிரப்ப அக்கறை காட்டாத மத்திய அரசு சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள உயர்சாதியினருக்கு 10% இடஒதுக்கீட்டை அவசர அவசரமாக அமுல்படுத்துகிறது என்றால், இந்த மோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசு உயர்சாதி இந்துக்களுக்கான அரசு என்பதை பிரகடனப்படுத்துகிறது.

மேலும் மனுதரும வர்ணாசிரம அடிப்படையிலான சமூகத்தை மீண்டும் கட்டமைக்கத் துடிக்கிறது.

அதனால்தான் வறுமையில் உள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்கிறோம் என்கிற பெயரில் உயர் சாதியினருக்கு மட்டும் இடஒதுக்கீடு வழங்கி இருக்கிறார்கள். இடஒதுக்கீட்டில் பொருளாதாரத்தை புகுத்துவது தவறு என்றாலும் அப்போதுகூட இந்துத்துவவாதிகளுக்கு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிரிவினர் நினைவுக்கு வரவில்லை.

ஆக, சமூகத்தில் சமநிலையை, சமத்துவத்தை உண்டாக்க உருவாக்கப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கையை ஆழக்குழிதோண்டி





புதைப்பதற்கே உயர்சாதியினருக்கு 10% இடஒதுக்கீட்டை மத்திய மோடி அரசு அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்துமத தத்துவத்தின் படி சமூகத்தை தக்கவைக்க உருவான பி.ஜே.பி.கட்சியிடம் நாம் வேறென்ன எதிர்பார்க்க முடியும். வரலாறெங்கும் வன்முறையையே வழிமுறையாகக் கொண்ட இந்துத்துவவாதிகள் அரசியல் சட்டத்தையும் நீதிமன்றங்களையும் அலட்சியப்படுத்திவிட்டு சட்டத் திருத்தம் செய்திருக்கிறார்கள்.

சமூக நீதியை நிலைநாட்டி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின மக்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடுவோம். நூற்றாண்டுகளுக்கு முன்பு நம் தலைவர்கள் நமக்களித்த இடஒதுக்கீடு உரிமையை காப்பாற்றுவோம். இடஒதுக்கீட்டை அழிக்கத் துடிக்கும் இந்துத்துவ சக்திகளை தமிழ் நாட்டிலிருந்து விரட்டுவோம். இடஒதுக்கீட்டிற்காக முதல் அரசியல் சட்டத் திருத்தத்தை செய்யக் காரணமாக இருந்த தந்தை பெரியார் மண்ணில் இடஒதுக்கீட்டை சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராக அணி திரள்வோம்.

**சாதியால் பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும்போது பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதில் என்ன தவறு என்று விவாதிக்கும் நண்பர்களுக்கு சில கேள்விகள்:**

*1. அரசியல் சட்டம், நீதிமன்றம் இவற்றின் வழிகாட்டுதல்களை மத்திய அரசே மீறலாமா?*

*2. நிலையாக இல்லாத பொருளாதாரத்தை எப்படி இட ஒதுக்கீட்டிற்கு அளவுகோலாக வைப்பது?*

*3. கிராமப்புறங்களில் நாளொன்றுக்கு 27 ரூபாய் சம்பாதிக்கிறவரும் நகர்ப்புறத்தில் 33 ரூபாய் சம்பாதிக்கிறவரும் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர் என்ற வரையறை உள்ள நாட்டில், வருடம் 3 லட்சம் சம்பாதிப்பவர் வருமான வரி கட்ட வேண்டும் என்ற விதிமுறை உள்ள நாட்டில் ஆண்டுக்கு 8 லட்சம் [நாளொன்றிற்கு 2000 ரூபாய்க்கு மேல்] வருமானம் உள்ளவர் எப்படி பொருளாதாரத்தில் பின்தங்கியவராக கருதப்படுவார்?*

*4. தற்போதுள்ள இடஒதுக்கீட்டால் தகுதி திறமை உள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அதனால் நாட்டின் வளர்ச்சி தேங்கிவிட்டது என்று கூப்பாடு போட்டவர்கள், இப்போது பொருளாதார ரீதியாக இட ஒதுக்கீடு வழங்கியுள்ளார்களே! இதனால் தகுதி திறமை பாதிக்கப் படாதா? அல்லது உயர்சாதியினர் எல்லாம் தகுதி திறமை உள்ளவர்கள் என்ற மனுதர்ம ஆட்சி நடக்கிறதா?*

*5. பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு அளிப்பது சம்பந்தமாக மண்டல் குழு அமைக்கப்பட்ட பொழுது, அக்குழு பிற்படுத்தப் பட்டவர்கள் யார் என்பதை வரையறை செய்ய நாடு முழுவதும் சென்று கள ஆய்வு செய்து, அவர்களின் சமூக, கல்வி நிலைகளைப்பற்றி விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து, பல்வேறு சமூக, மானுடவியல், சட்ட நிறுவனங்களின் துணை கொண்டு முடிவு செய்தனர். ஆனால், எந்த ஆய்வின் அடிப்படையில், புள்ளிவிவரங்களின் துணையோடு இரண்டே நாளில் உயர்சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு என்று முடிவு செய்து சட்டமாக்கினார்கள்?*

*6. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் உயர் சாதியில் மட்டும் தான் இருக்கிறார்களா?*